47—

அடுக்குமாடிக் குடியிருப்புகள்

***4507—திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, மேலூரில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மதுரை மாவட்டம், மேலூர் நகராட்சிப் பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் அரசு அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுவதற்கான திட்டங்கள் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள்.*

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வங்கள், மறைந்தும் மக்கள் மனதில் குடிகொண்டிருக்கும் தமிழக முதலமைச்சர்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும், புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன்.*

மேலூர் தொகுதி, மேலூரில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டுவதற்கும், மேலூர் தொகுதியில் மிகவும் பின்தங்கிய விவசாய மக்கள் குடிசைப் பகுதியில் வாழ்ந்து வருவதால், குடிசை மாற்று வாரியத்தின் மூலமாகக் குடியிருப்புகளைக் கட்டுவதற்கும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

2017 மார்ச் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக மேலூர் நகராட்சியில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள மேலூர் நகராட்சிப் பகுதியின் அருகிலேயே நிலம் கண்டறிந்து கொடுப்பார்களேயானால், மேலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் இருக்கின்ற பயனாளிகளின் பட்டியலையும் தயார் செய்து கொடுப்பார்களேயானால், அவற்றையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலனை செய்து, ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள்.*

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 48, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

48—

மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

***6558—திரு. மு.க. ஸ்டாலின்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொளத்தூர் தொகுதி, பெரியார் நகரில் இயங்கும் அரசு புறநகர் மருத்துவமனையைத் தரம் உயர்த்தி, சென்னையிலுள்ள